பெற்றவர் திருப்பூர் குமரன். அத்தகைய தியாக சீலருக்கு அரசே திருப்பூரிலே ஒரு மணிமண்டபத்தினை அமைக்க முன் வரவேண்டும். மற்ற விஷயங்களைப் போல இதைக் கருதாமல், தமிழகத்திற்குப் பெருமை தேடித்தந்தவர் என்ற முறையிலே அவருக்கு மணி மண்டபம் அரசு செலவிலேயே அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இதைப் போன்ற நினைவுச் சின்னங்கள் அல்லது உருவச் சிலைகளை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் இப்போது அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. இது நல்ல அறிகுறியைக் காட்டுகிறது. குறிப்பாக இந்த அரசு வந்ததற்குப் பிறகு, அப்படி தேசியத் தலைவர்களுக்கும், நாட்டிலே மிகச் சிறந்த தொண்டாற்றிய தலைவர்களுக்கும் மரியாதை வழங்குகின்றது என்கின்ற உணர்வின் வெளிப்பாடாகத்தான் அதைக் கருதுகிறோம். அப்படிப்பட்ட வேண்டுகோள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், அதைப் பரிசீலிப்பதற்கும், எந்தக் கோரிக்கைக்கு முக்கியத்துவம், முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்றும், எதை நிறைவேற்ற வேண்டும் என்றும் முடிவெடுத்து அரசுக்கு அறிவிப்பதற்காக ஒரு குழு அமைப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப்பட்ட குழு அமைக்கப்பட்ட தற்குப் பிறகு, அந்தக் குழுவின் பரிந்துரைக்கேற்ப இப்படிப்பட்ட நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, நெஞ்சிலே உரமும், நேர்மைத் திறனும் மிக்கவராக தாயின் மணிக்கொடியைக் கையிலே ஏந்தி உயிர் போகின்ற வரையில் போராடிய அந்த வீர மறவனை உலகெங்கிலும் இருந்து வருகின்றவர்கள் பார்த்துப் பாராட்டுகின்ற அளவுக்கு, ஏன் சென்னையிலேயே அரசு ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பக் கூடாது? அதை பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சித்தன் அவர்களுடைய கேள்வியின் தொடர்பான கேள்விக்குத்தான் நான் விரிவாக இப்போது பதில் அளித்திருக்கிறேன்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சி மருந்து, விதைகள் வழங்கும் திட்டம்.

***வினா எண். 1067. திரு.** கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சி மருந்து மற்றும் விதைப் பொருட்கள் ஆண்டு முழுவதும் எல்லாக் காலங்களிலும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1981 மே 12]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு சில பணப்பயிர்களுக்கும், நெல் பயிர்களுக்கும் பூச்சி மருந்து, விதை போன்ற பொருள்கள் மானிய விலையில் வழங்கப்பட்டது. அது இப்போதும் தொடர்ந்து வழங்கப்படு கிறதா? அப்படி வழங்கப்படுகிற நேரத்தில் தேவையான மருந்து கொடுக்காமல் வேறு மருந்தை உபயோகம் அற்ற முறையில் கொடுக்கப்படுகிறது. ஆகவே அப்படிக் கொடுக்கப்படும் மானியத்தைப் பணமாகவே கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்போதும் நெற்பயிருக்கு புகையான் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பூச்சிமருந்துகள் 50 சதவிகிதத்தில் மானிய விலையில் வழங்கப்படு கின்றன. அதைப்போலவே பருப்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பூச்சிமருந்துகள் 25 சதவிகிதத்தில் ஒரு ஹெக்டேருக்கு 30 க்கும் மேற்படாமல் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. மாநில அரசு நிதி உதவியோடு செயல்முறைப்படுத்துகின்ற பருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பூச்சி மருந்துகள் 25 சதவிகிதத்தில் ஒரு ஹெக்டேருக்கு 15-க்கு மேற்படாமல் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. மானியத்தைப் பணமாகக் கொடுக்கிற உத்தேசம் இல்லை.

[முற்பகல் 9.20]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, இப்போது சில பூச்சி மருந்துகள், மற்றப்பொருள்கள் எல்லாம் மானியத்திலே கொடுப்ப தாகச் சொன்னார்கள். விதைப்பொருள்கள்—ஹைபிரீட் வகைகள்— அதிகமான விலையில் இருப்பதால், அதனை வாங்கி சிறிய விவசாயிகள் உபயோகிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு டெப்போக்களில் அந்த விதைகளை லாப நோக்கத்தோடு அல்லாமல், மலிவான விலையில் விற்றால் ஏழை எளிய விவசாயிகள் அதை வாங்கிப் பயன் படுத்த முடியும். அப்படி மலிவான விலையில் விற்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, டெப்போக்கள் மூலமாக விதைகள் வழங்க ஏற்பாடு செய்தாலும் மலிவான விலையில் வழங்கமுடியாது. லாப நோக்கம் இல்லாமல் கொள்முதல் விலையிலே அதனை வழங்க நாம் ஆவன செய்யலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர் களே, மானிய விலையில் பூச்சிமருந்துகள் கொடுப்பதில் சில தவறுகள் இருப்பதாக புகார்கள் வருகின்றன. ஆகவே மானிய விலையில் இந்தப் பூச்சி மருந்துகளை வழங்குவதைத் தவிர்த்து, அந்த மானிய விலையில் கொடுப்பதற்கு ஆகும் செலவிற்கு ஈடாக, தொகையை வைத்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்

கொள்முதல் விலையில் கூட்டிக் கொடுத்து, அரசுக்கு விற்பனை செய்யும் அனைத்து விவசாயிகளும் நன்மையடைய அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதிலே சில திட்டங்கள் மத்திய அரசின் திட்டமாக இருப்பதால் நாம் அது குறித்து பரிசீலனை செய்து முடிவு செய்ய வழியில்லை.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுபோன்ற மானிய திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விதை பொருள்கள், பூச்சி மருந்துகள் திரும்பத் திரும்ப ஏற்கனவே அளிக்கப்பட்டவர்களுக்கே அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுவதால், ஊராட்சி ஒன்றியங்களில் யார் யாருக்கு எப்போது அவைகள் வழங்கப்பட்டன என்பதைக் குறித்து பெயர் பட்டியல் போர்டு வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு என்னென்ன முறைகளை, என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அவற்றை எடுப்பதற்கு அரசு முயற்சிக்கும்.

பலநிற பருத்தி உற்பத்தி

*வினா எண். 1068 திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பல நிற பருத்தி உற்பத்தியாவதை அரசு அறியுமா?

(ஆ) அவற்றை தமிழ்நாடு பூராவும் அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) பல நிற பருத்தி உற்பத்தியாவதை அரசு அறியும்.

(ஆ) பலநிற பருத்தியை அபிவிருத்தி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன் என்றால், இந்த பருத்திகள் வியாபார நோக்குடன் பயிர் செய்யப்படுவதில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல துணிகளில் சாயம் வெளுத்துப் போய்விடுகின்றன. பல நிற பருத்தி கிடைத்தால், அந்த இயற்கையான நிறம் அப்படியே இருக்கும். சாயம் வெளுத்துப் போகாமல் இருப்பதையொட்டி, இந்த பலநிற பருத்தி விதையை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு அதிகமாக விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பல நிற பருத்தி பெரும்பாலும் ரஷ்யாவில் காணப்படுகிறது. அங்கே கூட காட்சிப்பொருளாகத்தான் அந்தப் பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறதே தவிர, சாயம் வெளுக்காமல் இருப்பதற்கு அதைப் பயன்படுத்த இயலாது. ஏனென்றால் இந்தப் பருத்தியின் சாயமும் வெளுத்து விடும்.